APRIL/MAY 2025

FLT40/CLT40 — தமிழ் IV

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாவிற்கும் விடையளிக்க.

1. குறுந்தொகை நூலைத் தொகுப்பித்தவர் யார்?

2. நற்றிணை பாடலை எத்தனை புலவர்கள் பாடியுள்ளனர்?

3. குமணனின் மலையின் பெயர் என்ன?

4. பாரியின் சிறப்பைப் பாடிய புலவர் யார்?

5. கலித்தொகையின் பாடல் வரிகள் எத்தனை?

6. பரிபாடல் என்றால் என்ன?

7. குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் யார்?

8. கலித்தொகையுள் குறிஞ்சிக் கலியைப் பாடியவர் யார்?

9. சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படுபவை எவை?

10. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?

Shanmugha Industries Arts & Science College T.V.Malai

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாவிற்கும் விடையளிக்க.

11. (அ) உடன்போக்கு மேற்கொண்ட தலைவன் தலைவியை வழியில் கண்டோர் வருந்திக் கூறியவற்றைக் குறுந்தொகை பாடல்வழி விவரி.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றின் வேட்கை பத்து கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

12. (அ) குமணனின் வள்ளல் தன்மையைப் பெருஞ்சித்தரனார் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து – குறிப்பு வரைக.

13. (அ) முல்லைக் கலியுள் தலைவியிடம் கூறுவதாக அமைந்துள்ள பாடல் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) வைகை ஆற்றின் பெருவெள்ளத்தை நல்லுந்துவனார் பாடல் வழி அறியலாகும் செய்திகள் விளக்குக.

14. (அ) குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் மலரின் பெயர்களைக் சுட்டுக.

(அல்லது)

(ஆ) காவலன் எய்திய அம்பினால் சினமடைந்த யானையின் செயலைக் குறிஞ்சிப்பாட்டின் வழி விளக்குக.

Shanmuga Industries Arts & Science College ★ T.V.Malai

15. (அ) அகநானூறு பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டில் அகப்புறநூல் எது? விவரி.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.

16. ஐங்குறுநூற்றில் தாயும் மகளும் அவரவர் வேறுபட்ட விருப்பத்தைத் தெரிவிக்கும் காட்சிகளைக் கட்டுரைக்க.

17. புறநானூற்று பாடலில் கொடையின் இயல்பைக் கழைதின் யானையார் எவ்வாறு குறிப்பிடுகின்றார்? விளக்குக.

18. வைகை ஆற்றின் பிறப்பிடம், அதன் சிறப்பினை ஆராய்க.

19. குறிஞ்சி நிலத்தலைவனின் நாட்டின் சிறப்பினையும், மலைவளத்தினையும் விவரித்து எழுதுக.

20. ஆற்றுப்படை என்றால் என்ன? ஆற்றுப்படை நூல்கள் பற்றி விவரிக்க.

———————